முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 185/2019

**வாதி தரப்பு சாட்சி-2 கருப்பன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 29.01.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு எழுதப்படிக்க தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் சொன்னதுதான். இவ்வழக்கு யார் யார்மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஜோசப் மகன் சைமன் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளோம். ஜோசப் மகன் குடியிருக்கும் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண். என்னவென்றால் 1, 2, 3 ஆகும். சர்வே எண்.1, 2, 3-க்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் சைமன் பெயரில் உள்ளது. நான் 10 வயது இருக்கும்போதில் இருந்து எனது 52 வயது வரை வாதி, பிரதிவாதிகளின் பண்ணையில் வேலை செய்தேன்.

2) நான் வேலை செய்ததற்கு எழுத்து மூலமாக ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு இவ்வழக்கு நடப்பது பற்றி யார் சொன்னது என்றால் ஜோசப் சொன்னார். ஆரோக்கியம் நடத்திவரும் பள்ளிக்கூடம் எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. ஆரோக்கியம் எப்போது இறந்தார் என்றால் தேதி மாதம் வருடம் தெரியாது. சுமார் 20 வருடம் இருக்கும். அமலி எப்போது இறந்தார் என்றால் தேதி மாதம் வருடம் தெரியாது. ஆரோக்கியத்திற்கு முன்பே இறந்துவிட்டார். ஆரோக்கியம் தன் மனைவி பெயரில் எந்த தேதியில் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் தேதி தெரியாது. எந்த சொத்து குறி எழுதிவைத்தார் என்றால் தெரியாது. சைமன் எந்த வருடம் தனது தகப்பனாருக்கு எதிராக செயல்பட்டார் என்றால் தேதி தெரியாது.

3) சைமன் அவரின் தகப்பனாருக்கு எதிராக எந்த நீதிமன்றத்தில் என்ன வழக்கு தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. எப்போதிலிருந்து ஆரோக்கியத்திற்கு உடம்பு சரியில்லாமல் போனது என்றால் தேதி மாதம் வருடம் தெரியாது. அவர் எங்கு சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் தெரியாது. ஆரோக்கியம் எந்தெந்த காலக்கட்டத்தில் எங்கெங்கு வசித்தார் என்றால் உடல்நிலை சரியான பின்னிட்டு

திருச்சியில் ஜோசப் வீட்டிற்கு சென்றார். பின்னிட்டு தாவா கிராமத்திற்கு வந்து சைமன் வீட்டில் இருந்தார். அவருடன் பிரச்சனை ஏற்பட்டதால் ஆரோக்கியம் தன் மகள் வீட்டிற்கு சென்று விட்டார். நான் எப்போது ஆரோக்கியத்தை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன் என்றால் தேதி மாதம் வருடம் தெரியாது. அமலிக்கு உடல்நிலை சரியில்லாதபோது சைமன் அவரை மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றதாக சொல்லியுள்ள தேதி மாதம் வருடம் என்னவென்றால் தெரியாது.

4) சைமன் அவருடைய தாயாரை எப்போது பத்திர அலுவலகத்திற்கு அழைத்துச்சென்றார் என்றால் 2005 ம் வருடம் தீபாவளிக்கு முன்பு .குறிப்பிட்ட தேதி மாதம் தெரியாது. ஆரோக்கியம் குடும்பத்தில் எந்தெந்த சொத்துக்களை பொறுத்து என்னென்ன ஆவணங்கள் யார்யாருக்கிடையே ஏற்பட்டுள்ளது என்பதுபற்றி தெரியுமா என்றால் தெரியாது. குடும்பபிரச்சனைக்காக ஆரோக்கியம், அமலி காவல்துறையில் புகார் கொடுத்துள்ளனரா என்றால் தெரியாது. எந்த தேதியில் கொடுத்தார்கள் என்றால் தேதி தெரியாது. ஆரோக்கியத்தின் மகள் லீமா குடியிருக்கும் வீட்டின் கதவு எண் என்ன என்றால் தெரியாது. பள்ளிக்கூடம் ஆரோக்கியத்தின் தகப்பனார் ஆரம்பித்ததா என்றால் ஆமாம்.

5) தற்போதுவரை மேற்படி பள்ளி செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான். மேற்படி பள்ளிக்கு 2 ம் பிரதிவாதி தான் தலைமையாசிரியர் என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்துள்ளதா என்றால் இல்லை. இன்று ஜோசப் ஆஜரில் உள்ளரா என்றால் இல்லை. அவரது மகன் வந்துள்ளார். நான் ஆரோக்கியம் தோட்டத்தில் வேலை பார்த்து வந்ததாகவும், அவரது குடும்பம் பற்றி எனக்கு தெரியும் என சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. எனக்கு தெரியாத விபரங்களை ஜோசப் மகன் தயாரித்து வைத்திருந்த பிரமாண வாக்குமூலத்தில் நான் கையெழுத்து செய்து கொடுத்துள்ளேன் என்றால் ச ரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**